
பக்கங்கள் 16+5

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 11 ஞாயிற்றுக்கிழமை 24.03.2024 அதிர்வு 237

## மொட்டுவின் வேட்பாளர் ரணில்தான்



### ஜே.வி.பி. சொல்கின்றது

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்கதான் என்பது உறுதியாகியுள்ளது


04 ▶



### ஈஸ்டர் குண்டு வெடிப்பு விவகாரம்:

# மைத்திரி நாளை சி.ஐ.டிக்கு அழைப்பு

### தாக்குதல் சூத்திரதாரிகள் வெளிப்படுவார்களா?



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றப் புலனாய்வு விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார். இதன்படி அவரிடம் நாளை திங்கட்கிழமை வாக்குமூலம் பெறப்படவுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை உண்மையாகவே நடத்தியவர்கள் யார் என்பது குறித்து தனக்குத் தெரியும் எனவும், நீதிமன்றம் உத்தரவிட்டால் அதனை வெளிப்படுத்துவதற்குத் தயார் எனவும் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் கண்டியில் வைத்து தெரிவித்திருந்தார்.

04 ▶

# கோட்டாபயவை விரட்டியடித்தது தமிழ் - முஸ்லிம் மக்கள் அல்லர்!

## ஜனாதிபதி வேட்பாளருக்கு ரணில் தகுதியானவர் என்கின்றார் பஸில்





கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து விரட்டியது தமிழ் – முஸ்லிம் மக்கள்தான் என்று கோட்டாபய ராஜபக்ஷ அவரது "சதி" என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதை ஏற்க முடியாது என்றும், அவர்கள் தான் விரட்டினார்கள் என்று தான் கருதவில்லை என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துக் கூறுகையில்,

"ஜனாதிபதி வேட்பாளருக்குத் தகுதியானவர் ரணில் விக்கிரமசிங்கதான். பொருளாதார ரீதியில் வீழ்ச்சிப் பாதையில சென்ற இந்த நாட்டை அவர் மீட்டெடுத்திருக்கிறார்.

04 ▶



# வவுனியாவில் ரெலோவின் தேசிய மாநாடு

(கே.வசந்தன்)

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) 11 ஆவது தேசிய மாநாடு வவுனியா நகர சபை மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் முன்னதாக கட்சியின் கொடியேற்றப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தமிழரின் விடுதலைப் போராட்டத் துக்காக உயிர்நீத்த அனைத்துப் பொதுமக்களுக்கும், போராளிகளுக் குமாக ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தப்பட்டது. நிகழ்வில் கட்சியின் மாநாட்டுப் பிரகடனம் வாசிக்கப்பட் டதுடன், சிறப்புரைகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராஜா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி., ரெலோவின் செயலாளர் நாயகம் கோவிந்தம் கருணாகரம் எம்.பி., இலங்கைத் தொழி லாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அக்கட்சி யின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், அரசியல் கட்சி களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



















# காசநோய்க்கு முடிவு கட்டுவோம்!

## வவுனியாவில் இன்று விழிப்புணர்வு ஊர்வலம்

(கே.வசந்தன்)

வவுனியாவில் காசநோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் இன்று இடம்பெற்றது.

வவுனியா காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கே.சந்திரகுமார் தலைமையில் வைத்தியசாலை பின் வீதியில் அமைந்துள்ள மார்பு நோய் சிகிச்சைப் பிரிவில் “ஆம் எங்களால் காசநோயை முடிவுக்குக் கொண்டுவர முடியும்” எனும் தொனிப்பொருளில் உலக காசநோய் தினமான மார்ச் 24 விழிப்புணர்வு கருத்துரைகள் இடம்பெற்றதுடன், அங்கிருந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமாகியது.

வைத்தியசாலை பின் வீதியில் ஆரம்பமாகிய விழிப்புணர்வு ஊர்வலம் கண்டி வீதிக்குச் சென்று அங்கிருந்து பண்டாரவன்னியன் சதுக்கத்தை அடைந்து மன்னார் வீதி ஊடாக குருமன்காடு சந்தியை அடைந்து, ரயில் வீதி ஊடாக வவுனியா நகரை அடைந்து அங்கிருந்து பசார் வீதி ஊடாக ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து வைத்தியசாலையைச் சென்றடைந்தது.

இதில் காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவு வைத்தியர்கள், தாதியர்கள், தாதிய மாணவர்கள் ஆகியோருடன் ஓட்டோக்களும் விழிப்புணர்வுப் பதாதைகளைத் தாங்கியவாறு ஊர்வலமாக வலம் வந்திருந்தன.











# இரு தேர்தலைகளையும் ஒரே நேரத்தில் நடத்துக!

## செலவைக் குறைக்க அரசுக்கு சபாநாயகர் யாப்பா ஆலோசனை

ஜனாதிபதித் தேர்தல், நாடாளு மன்றத் தேர்தல் ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் நடத்துமாறு சபா நாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அரசுக்கு ஆலோசனை வழங்கி யுள்ளார்.

இவ்வாறு இரண்டையும் ஒன்றாக நடத்துவதால் செலவை மீதப்படுத்த முடியும் என்று கூறிய சபாநாயகர், இரண்டு தேர்தல்களையும் தனித்த னியே நடத்தினால் அதிக பணம் செல வாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

நாடு இப்போது இருக்கின்ற நிலையில் இரண்டையும் ஒன்றாக நடத்துவதே சிறந்தது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது.

## காட்டு யானை தாக்கி குடும்பப் பெண் சாவு!

(ராமு தனராஜா)

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகிக் குடும்பப் பெண் ஒருவர் சாவடைந்தார்.

இந்தச் சம்பவம் மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அஹயபுர பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்றது.

44 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயே சம்பவத்தில் உயிரிழந்தார்.

இன்று அதிகாலை 4.30 மணியளவில் தனது வீட்டுப் பகுதிக்கு வந்த காட்டு யானையை விரட்ட முற்பட்ட வேளை யில் யானை தாக்கியதில் மேற்படி பெண் சம்பவ இடத் திலேயே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மஹியங்கனைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## 12 வயது சிறுவன் ஓட்டோ மோதி பலி!

வீதியில் சைக்கிளில் சென்ற 12 வயது சிறுவன் மீது பின்னால் வந்த ஓட்டோ மோதியதில், சிறுவன் சம்பவ இடத்திலேயே சாவடைந்தார்.

இந்தப் பரிதாபச் சம்பவம் கம்பஹா, மினுவாங்கொடை பிரதேசத்தில் இன்று முற்பகல் இடம்பெற்றது.

வீட்டிலிருந்து 400 மீற்றர் தூரத்தில் இருக்கும் கடைக் குப் பொருட்கள் வாங்கச் சென்ற சிறுவனே விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

ஓட்டோவின் சாரதியைக் கைது செய்த பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மைத்திரி நாளை...**

அவரின் அறிவிப்பு தெற்கு அரசி யலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது. இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கைது செய்து விசாரணைகளை நடத்து மாறு கோரி, பல தரப்பினரும் சி.ஐ.டியில் முறைப்பாடு தாக்கல் செய்திருந்தனர்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட தகவல் தொடர்பில் உடனடியாக விசார ணைகளை ஆரம்பிக்குமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு அவசர பணிப்புரை விடுத்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்தி லேயே மைத்திரி தொடர்பில் விசாரணை ஆரம்பமாகவுள்ளது. அவரிடம் சி.ஐ.டி யினர் இது சம்பந்தமாக நாளை வாக்குமூலம் பெறவுள்ளனர்.

**மொட்டுவின்...**

என்று ஜே.வி.பியின் உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"மொட்டுக் கட்சி ரணிலைத்தான் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தும் என்பது உறுதியாகியுள்ளது. பஸில் ராஜபக்ஷ ரணிலை நிறுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார்.

ராஜபக்ஷ உள்ளிட்ட திருடர்களைப் பாதுகாப்பதற்காக ராஜபக்ஷ குடும்பத் தால் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட வர்தான் ரணில்.

அவர் அந்தப் பணியைச் சரியாகச் செய்து வருவதால் அவரையே மீண்டும் ஜனாதிபதியாக்குவதற்கு முயற்சி செய் கின்றார்கள். அவர்களின் கனவு இந்த ஜனாதிபதித் தேர்தலுடன் முடிவுக்கு வரும்." – என்றார்.

**கோட்டாபயவை...**

அனைத்துப் பிரச்சினைகளும் மெல்ல தீர்ந்துகொண்டு வருகின்றன.

முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. இதை நான் ஜனாதிபதி ரணிலிடம் கூறியிருக் கின்றேன்." – என்றார்.



# இலங்கை பிரதமரை சந்தித்துள்ள மலேசிய எம்.பி. டட்டுக் சரவணன்!

(நூருல் ஹுதா உமர் )

பிரதமர் தினேஸ் குணவர்தன வுக்கும் மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டட்டுக் சரவணனுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்துவது குறித்து இருவரும் கலந்துரையாடினர்.

அதேபோன்று டட்டுக் சரவணன் மனிதவள அமைச்சராக இருந்த காலப்பகுதியில் இலங்கையர்கள் மலேசியாவில் பணிபுரிவதற்கான 10 ஆயிரம் வேலை வாய்ப்பு வீசாவுக்கான ஒதுக்கீட்டுக்கு அனுமதியை வழங்கியுள்ளார்.

அதற்காகப் பிரதமர் நன்றிகளைத் தெரிவித்துள்ளதுடன், இந்த நடவடிக்கைக்கு தொடர் முயற்சிகளை மேற்கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தன பாராட்டுக்களை தெரிவித்தார்.

தற்போது இந்த ஒதுகீட்டை இலங்கையை சேர்ந்த 1853 இளைஞர், யுவதிகள் பயன்படுத்தியுள்ளனர்.

மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டட்டுக் சரவணன் கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியில் இருந்து, இலங்கையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோர் சிறந்த நிர்வாகத் திறன் ஊடாக மிக விரைவாக மீட்டெடுத்தனர்.

ஏனைய நாடுகள் இலங்கை பொருளாதார வீழ்ச்சியில் மீண்டெழ கையாண்ட அணுகுமுறைக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தது.

அத்துடன் இலங்கைக்கு எந்த நேரத்திலும் மலேசிய அரசு உதவுவதற்குக் காத்திருக்கிறது.-என்றார்.




# சதுரங்கத்தில் மாவட்டத்தில் வென்ற கல்முனை ஸாஹிரா!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

விளையாட்டு அமைச்சு மற்றும் விளையாட்டு திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான அம்பாறை மாவட்ட சதுரங்க போட்டி ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் சாய்ந்தமருது பிரதேச செயலகம் சார்பாக கலந்துகொண்ட கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அணியினர் மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு கிழக்கு மாகாண மட்ட போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# புதிய பார்வை தேவை

ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டக் காலத்திலும் சரி, அதன் பின்னரான இந்த 15 ஆண்டுகளிலும் சரி, தமிழர் தரப்பின் போக்கில் பிரதான சறுக்கல் எங்கே இருந்தது என்று கேட்டால், அது, சர்வதேச அணுகுமுறையிலும் ஊடாட்டத்திலும் என்று அரசியல் அரிச்சுவடி படித்தவர்களும் கூறிவிடுவர்.

சர்வதேச அரசியலை - சர்வதேச தரப்புகளுடனான தொடர்பாடல்களை - கையாளுவதில் உரிய கரிசனையோ, தகுந்த தேர்ச்சியோ இல்லாதமைதான் நமது பல பின்னடைவுகளுக்கும் காரணம். அது நமது பட்டறிவு. புதிய விடயம் அல்ல.

பல சமயங்களிலும் சர்வதேசத்தினால் நமக்குச் சாதகமாக திருப்பக் கூடிய விடயங்களை நமது தரப்புக்களின் - தலைவர்களின் - தவறான கையாளுகை மூலம் நமக்கு எதிராக நாமே திருப்பிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், மறுபுறத்தில் ஒரு நாடு என்ற சட்டபூர்வ அந்தஸ்தை கொண்டிருக்கும் கொழும்பு அரசு, சர்வதேச கையாளுகை மற்றும் தொடர்பாடல்களைத் திட்டமிட்ட முறையில் மேற்கொண்டு, அதனை நீதி, நியாயம் மிக்க தமிழர்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிரான விவகாரமாக வெற்றிகரமாக மாற்றி வந்திருக்கின்றது என்பது கண்கூடு.

அந்த வகையில் அதன் இப்போதைய ராஜதந்திரமும் கவனிக்கப்பட வேண்டியதாகின்றது.

இந்தியா - சீனா என்று என்ற இரண்டு பெரும் வல்லாதிக்க ராஜதந்திரங்களுக்கு மத்தியில் நின்று கொண்டு, பாம்புக்கு வாலையும் மீனுக்குத் தலையையும் காட்டும் விலாங்கு போன்று சாமர்த்தியமாக கொழும்பு காரியமாற்றி வருகின்றது.

இலங்கையின் ஜனாதிபதிக்கு அடுத்த முன்னிலையில் இருக்கும் அரசுத் தலைவர் பிரதமர்தான். அந்நிலையில் இருக்கும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன நாளை முதல் ஐந்து நாள்கள் சீனாவுக்கு விஜயம் செய்கிறார். அவருடைய சீன விஜயம் குறித்துப் பரபரப்பான விவரங்கள், ஒழுங்குகள் வெளியாகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரப் பதவி நிலையில் தமக்கு அடுத்த நிலையில் இருக்கும் பிரதமரை சீனாவுக்கு அனுப்புகின்றார் என்றால், மறுபுறத்தில் தனது தனிப்பட்ட அதிகாரத்தில் அடுத்த நிலையில் இருப்பவரை அதே சமயம் இந்தியாவுக்கும் அனுப்புகின்றார்.

ஆம். ஜனாதிபதியின் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான பிரதம ஆலோசகரும், ஜனாதிபதியின் பணியாள் குழாமின் பிரதானியுமான சாகல இரத்நாயக்காவின் தலைமையில் ஓர் அணி வரும் புதன்கிழமையும் வியாழக்கிழமையும் புதுடில்லி விஜயத்தை மேற்கொள்கின்றது.

போக்குவரத்து மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளர்கள், ரயில்வேத் திணைக்களத்தின் பொதுமுகாமையாளர், சங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட மிக உயர்ந்த மட்ட அதிகாரிகள் குழுவும் இதில் இணைந்துள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தரைவழி இணைப்பு என்ற பெரும் திட்டத்தின் பூர்வாங்க ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்து முடிவு செய்வதற்காகவே இந்தக் குழு புதுடில்லி செல்வதாகக் கூறப்படுகின்றது.

அதாவது நாட்டின் பிரதமரை சீனாவுக்கு அனுப்பி சீனாவிடமிருந்து அதிக உதவி திட்டங்கள் மற்றும் இலங்கையுடனான சீன ஈடுபாட்டை அதிகரிக்க செய்யும் அதே சமயத்தில் -

மறுபுறத்தில், இந்தியாவுடன் தரைவழிப் பாதையைத் திறப்பதற்கான தீர்மானத்துக்குரிய தீவிர தொடர்பாடலை கொழும்பு சமயோசிதமாகப் பேணுகிறது.

எப்படித் தரப்புகளைச் சம தூரத்தில் வைத்து கையாள்வதன் மூலம் தன்னுடைய நலனை - பாதுகாப்பை - வருவாய் உதவிகளை - கனகச்சிதமாகப் பேணி முன்னெடுக்கின்றது கொழும்பு என்பது கவனிக்கப்பட வேண்டியது.

இந்தப் பாடத்தைத் தமிழர் தரப்பு இன்னும் கற்றுக் கொள்ளவே இல்லை என்பதுதான் நமது துன்பியல் நிலைமை.

ஆயுதப் போராட்ட வலிமையையும், அதன் மூலம் உரிமைகளுக்காகப் பேரம் பேசும் தகைமையையும் கொண்டிருந்த தமிழினம், இப்போது அவற்றை இழந்திருக்கும் இந்தச் சூழலில் இன்று அதற்கு இருக்கும் ஒரே ஒரு பற்றுக்கோடு சர்வதேச ஆதரவு மட்டுமே.

பல தரப்புகளையும் ஒரே சமயத்தில் கையாண்டு, உயர்ந்த ஆதரவையையும் வலிமையையும் ஈட்ட வேண்டிய இந்த விவகாரத்தில், வெறும் கிணற்றுத் தவளைகளாக, குண்டு சட்டிக்குள் குதிரை யோட்டும் 'காட்போர்ட்' சண்டியர்களாகத்தான் நமது தலைவர்களும் தொடர்பாளர்களும் இருக்கின்றனர்.

மக்கிப்போன, காலாதிகால சிந்தனைப் போக்கையும், கருத்தியலையும் தூக்கி எறிந்து ஒதுக்கி விட்டு, புதிய கண்ணோட்டத்துடன், புதிய நட்புக்கள் மற்றும் சிநேக சக்திகளை அரவணைக்கும் பார்வையுடனும் சர்வதேச உறவுகளுக்கான நமது தேடல் விரிய வேண்டும்.

# கொலன்னாவை அரச தொழிற்சாலை திணைக்களம் புத்துயிர் பெறவுள்ளது!





கொலன்னாவை அரச தொழிற்சாலைத் திணைக்களம் புத்துயிர் பெறப் போகிறது. அதற்கான திட்டமிடப்பட்ட வேலைத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்காக, அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்தியானந்த கடந்த வெள்ளிக்கிழமை (22) கொலன்னாவை அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்துக்குக் கண்காணிப்புச் சுற்றுலாவில் இணைந்துகொண்டார்.

புதிய தொழில்நுட்பத்துடன் போட்டி சந்தையை உருவாக்குவதற்கான திட்டங்களை வகுப்பதே இந்தக் கண்காணிப்புப் பயணத்தின் நோக்கமாக இருந்தது.

அங்கு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் ஒன்று கூடி அரச தொழிற்சாலைகள் திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் சென்று பல குழுக்களாக அவதானித்து ஒவ்வொரு துறையின் தற்போதைய நிலைமை மற்றும் சாதகமான முன்மொழிவுகளை ஆய்வு செய்தனர்.

அதன்படி, கண்காணிப்புச் சுற்றுப் பயணத்தின் ஆய்வுக்குப் பிறகு, அரச தொழிற்சாலைகள் திணைக்களத்துக்கான சந்தைப்படுத்தல் திட்டம் மற்றும் வருடாந்த திட்டத்தை விரைவில் தயாரிக்குமாறு அமைச்சின் செயலாளர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த திட்டத்தை உடனடியாக அமைச்சுக்கு சமர்ப்பிக்குமாறு அரச தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் ஆனந்த விஜேசிங்கவுக்கு, அமைச்சின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அரச தொழிற்சாலைத் திணைக்களத்தின் தேக்கமடைவதற்குக் காரணம், அதன் தயாரிப்புகளைச் சந்தைப் படுத்துவதற்கான விரிவான திட்டம் இல்லாததே என்பது கண்காணிப்புப் பயணத்தின் பின் நடந்த கலந்துரையாடலின் போது தெரியவந்தது.

நிறுவனத்தின் அனைத்து திணைக்களங்களுக்கும் உடனடியாக சந்தைப் படுத்தல் வேலைத்திட்டம் வழங்கப்பட வேண்டுமென அமைச்சின் செயலாளர் வலியுறுத்தினார்.

தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளின் தற்போதைய நிலைமை மற்றும் சாதகமான முன்மொழிவுகள் குறித்த ஆய்வில் ஈடுபட்டுள்ள அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் அதிகாரிகள், நிறுவனப் பணிகளை மேற்கொள்வதில் ஊழியர்களின் வெற்றிடத்தால் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகத் தெரிவித்தனர்.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கையை முன்வைத்து தேவைக்கு ஏற்ப ஊழியர்களை பணியமர்த்த முடியும் என்று அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம் 1849 ஆம் ஆண்டு கொழும்பில் ஐந்து லாம்புச் சந்தியில் அப்போதைய ஆங்கிலேயர் ஆட்சியால் நிறுவப்பட்டது. 1928 ஆம் ஆண்டில், தற்போதைய கொலன்னாவ பிரதேசத்தில் அரச மற்றும் தனியார் துறைகளின் அனைத்து இயந்திர பொறியியல் வேலைகளையும் மேற்கொள்வதற்காக அரச வேலைத் திணைக்களம் இயந்திரவியல் பணிமனையாக நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சைவசமய பாடத்தின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் நடவடிக்கைகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இந்த வருடம் க.பொ.த. சாதாரண தர பரீட்சை எழுதவுள்ள பட்டிருப்பு வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களின் சைவ சமய பாடத்தின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் மேலதிக பயிற்சிக்கான செயலட்டைகள் பட்டிருப்பு வலய கல்வி அலுவலகத்தால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிறிதரனால் ஆசிரியர்களிடம் கையளிக்கும் நிகழ்வு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



# அரச ஊழியர்களின் கலைத்திறனை வளர்க்கும் நோக்கில் வேலைத்திட்டம்









அரச ஊழியர்களின் கலைத்திறனை மேம்படுத்தும் நோக்கில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களிலும் விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கமைய இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன் முதற்கட்டமாக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தில் இந்த நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹிரான் பாலசூரியவின் அழைப்பின் பேரில், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில், இந்த நிகழ்ச்சி அண்மையில் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபன ஊழியர்கள் தமது திறமைகளைக் காட்டினர்.

இந்த நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், பணிப்பாளர் நாயகங்கள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# திறந்த அலுவலகமாகச் செயற்பட்டது பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகம்





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மண்முனை தென் எருவில்பற்று கல்விக் கோட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்களின் சேவையின் அவசியத் தன்மை கருதிப்பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகம் 21, 22 ஆம் திகதிகளில் திறந்த அலுவலக தினமாகச் செயற்பட்டது.

பட்டிருப்பு வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரனின் ஆலோசனையின் பேரில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது வருகை தந்திருந்த உத்தியோகத்தர்களது குறைகள் கேட்டறியப்பட்டு அவை உடனடியாக நிவர்த்தி செய்யப்பட்டன.



# சம்மாந்துறை ஆஸ்பத்திரியின் புதிய கட்டடத்தை விரைவில் மக்கள் பாவனைக்கு கையளிக்க முடிவு!

**(பாறுக் ஷிஹான்)**

சம்மாந்துறை வைத்தியசாலையின் புதிய கட்டடத்தை விரைவில் மக்கள் பாவனைக்குக் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமால் சம்மாந்துறை வைத்தியசாலையின் புதிய கட்டடத்தை விரைவில் மக்கள் பாவனைக்கு கையளிப்பது தொடர்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய நேற்று சனிக்கிழமை (23) மாலை சம்மாந்துறை வைத்தியசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினருடன் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகள் விஜயம் செய்து நிலைமைகளை பார்வையிட்டனர்.

இதன் போது குறித்த வைத்தியசாலையின் புதிய கட்டட நிர்மாணங்களை பார்வையிட்ட சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பி.ஜி மஹிபால தலைமையிலான அதிகாரிகள் பாராட்டியதுடன் வைத்தியசாலையின் இரண்டாம் கட்டமாக பல மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்து நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அங்கு உறுதியளித்தார்.

இந்தக் கள விஜயத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.எச்.எம் ஆசாத் ஹனீபா, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் வைத்தியர் ஏ.ஆர் . நியாஸ் அஹமட், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம். சீ. எம். மாஹிர் உள்ளிட்ட பிரிவு தலைவர்களும் கலந்து கொண்டனர்.



அடுத்தகட்டப் பணிகள் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுகாதார அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் வைத்தியசாலைகளில் அத்தியட்சகர்களையும் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுகாதார இராஜாங்க அமைச்சராக பதவிவகித்த காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் அயராத முயற்சியின் மூலம் நிந்தவூர் மகப்பேற்று வைத்தியசாலை மற்றும் சம்மாந்துறை பொத்துவில் ஏறாவூர் ஆகிய பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு தேவையாக கருதப்பட்ட கட்டடங்கள் ஆகியவற்றின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பின்னர் நாட்டில் ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகள் காரணமாக நிர்மாணப் பணிகள் தாமதமடைந்ததை தொடர்ந்து, அவற்றை நிறைவு செய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் பல்வேறு முயற்சிகளை எடுத்துவந்தார். இந்த நிலையில், சம்மாந்துறை வைத்தியசாலையின் புதிய கட்டடத்தை விரைவில் மக்கள் பாவனைக்கு கையளிக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

குறித்த கோரிக்கைக்கு அமைவாக ஜனாதிபதி செயலகம் இந்த விடயத்தை சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளது. அதன் பிரகாரம் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகள் நிந்தவூர் மகப்பேற்று வைத்தியசாலை நிர்மாணப் பகுதிக்கும், சம்மாந்துறை, பொத்துவில் மற்றும் ஏறாவூர் வைத்தியசாலைகளுக்கும் கள விஜயம் மேற்கொள்ள உள்ளனர்.விரைவான தீர்வுகள் பற்றி குறித்த குழுவினருடன் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் சிறுவர், மகப்பேற்று ஆஸ்பத்திரிக்கு நிதி ஒதுக்கீடு!

(பாறுக் ஷிஹான்)

திருக்கோவில் ஆதார வைத்திய சாலை மற்றும் ஏனைய வைத்திய சாலைகளின் அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் இதர வசதிகள் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட குழுவினர் அம்பாறை மாவட்டத்துக்குக் கள விஜயம் ஒன்றை சனிக்கிழமை(23) மாலை மேற்கொண்டிருந்தனர்.



குறித்த விஜயத்தின் போது சுகாதார இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த காலத்தில நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் அயராத முயற்சியின் பலனாக 800 மில்லியன் செலவில் நிந்தவூர் மகப்பேற்று வைத்தியசாலையின் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில் சுகாதார இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமால் முன்னெடுக்கப்பட்ட நிர்மாணப் பணிகளைத் துரித கதியில் முன்னெடுக்க ஜனாதிபதியிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக ஜனாதிபதி செயலகம் இந்த விடயத்தைச் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்திருந்தது.

அதன் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகள் நிந்தவூர் மகப்பேற்று வைத்தியசாலை நிர்மாணப் பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டு ஆய்வுகளை நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 100 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்மாணப்பணிகளை ஆரம்பிக்க சுகாதார அமைச்சின் செயலாளர்வைத்தியர் பி.ஜி. மஹிபால ஒப்புதல் அளித்துள்ளதோடு குறித்த பணிகளை துரித கதியில் மேற்கொள்ள அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

இந்தக் கள விஜயத்தின் அடுத்த கட்டப் பணிகள் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை சுகாதார அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் வைத்தியசாலைகளில் அத்தியட்சகர்களையும் கலந்துரையாடலில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம். சீ. எம். மாஹிர் உள்ளிட்ட பிரிவு தலைவர்களும் கலந்து கொண்டனர்.

# மகளிர் தினத்தை முன்னிட்டு எல்லே விளையாட்டு நிகழ்வு!





(அஸ்ஹர் இப்றாஹிம்)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் எண்ணக்கரு மற்றும் வழிகாட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளின் வரிசையில் மகளிர் உத்தியோகத்தருக்கான எல்லே விளையாட்டு நிகழ்வு மகிழுர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்களிடையே விளையாட்டு திறனை மேம்படுத்தும் நோக்கில் இளைஞர் சேவை உத்தியோகத்தர் த. சபியதாஷ் மேற்பார்வையில் பயிற்சியளிக்கப்பட்டு இறுதிப் போட்டி இடம்பெற்றது.

பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி புவனேஸ்வரி ஜீவகுமார் தலைமையிலான அணியினருக்கும், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வள்ளி வேணுகோபாலன் தலைமையிலான அணியினருக்கும் இடையில் இடம்பெற்ற போட்டி தலா 3 ஓட்டப் பெறுதிகளுடன் சமநிலையில் நிறைவு பெற்றது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் உட்பட பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் கழகங்களின் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



# கல்முனை ஆஸ்பத்திரியில் சர்வதேச வன தின நிகழ்வு!

## பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் மரக்கன்று!!

( வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச வன தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் பெரு நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வானது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர். இரா. முரளீஸ்வரன் தலைமையில் வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (22) நடைபெற்றது.

வைத்தியசாலைத் திட்டமிடல் பிரிவினரின் ஏற்பாட்டிலும் தரமுகாமைத்துவ பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் ப.செல்வகுமாரின் ஒருங்கிணைப்பிலும் இது இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக அம்பாறை மாவட்ட வன அலுவலர் ஆர்.எம்.விஜயபால, அம்பாறை மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் எஸ். உதயராஜன், விசேட அதிதிகளாக அம்பாறை மாவட்ட உதவி வன அலுவலர் கலாநிதி.எம்.ஏ.ஜாயா, அம்பாறை மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவு பிரதிப்பணிப்பாளர் எச்.பி.அனீஸ், கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், கல்முனை வடக்கு வைத்திய அதிகாரி பணிமனையின் வைத்திய அதிகாரி டாக்டர் ந.ரமேஸ், கல்முனை பிரதேச சுற்றாடல் சபை அதிகாரி திருமதி.பி. செவ்வேற்குமரன், அக்கரைப்பற்று வன வள பாதுகாப்பு அதிகாரிகளான எஸ்.எம்.சபிக் மற்றும் ஏ. தியாகராஜா, கல்முனை கடற்படைத் தள கட்டளைத் தளபதி தம்மிக்க எக்கநாயக்க போன்றோர் கலந்து கொண்டனர்.

முதலில் கல்முனை ஆதார வைத்தியசாலையின் " பசுமைப் புரட்சியை நோக்கிய பயணம்" தொனிப் பொருளுக்கான இலட்சினை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து மர நடுகை நிகழ்வும் நடைபெற்றது. மேலும் "புதிய வரவும் புதிய மரமும்" எனும் தொனிப்பொருளின் ஊடாக வைத்தியசாலையில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு மரக்கன்று வழங்கப்படும். அதன் முதற்கட்டமாக மகப்பேற்று விடுதியில் அன்றைய தினம் பிறந்த 8 குழந்தைகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை மாணவர்களினால் வரவேற்பு நடனம் மற்றும் "காடுகளை பாதுகாப்போம்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு நாடகம் ஆகிய நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன. மேலும் மாணவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

நிகழ்வினை தமிழ் மொழியில் சுகாதார கல்வி பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி. என்.மனோஜினி மற்றும் சிங்கள மொழியில் பேச்சு மற்றும் மொழி சிகிச்சை பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தர் செல்வி.ரி. யாபா ஆகியோர் தொகுத்து வழங்கினர்.
















| | |
|---|---|
| **ROASTED CHILLI POWDER**<br>(Includes 14 spices)<br>250 G - 950/=, 100G - 395/= | **SPECIAL CUMIN SEED POWDER**<br>100G - 560/= |
| **UNROASTED CURRY POWDER**<br>250G - 850/=, 100G - 380/= | **CORIANDER POWDER**<br>100 G NEW - 190/= |
| **CHILLI POWDER**<br>100G - 290/= | **BLACK PEPPER POWDER**<br>100 G |

**FREE DELIVERY TO SPECIFIC AREAS**

**DELIVERY WILL BE CHARGED TO OTHER AREAS**

# கல்முனை பொதுப் பணி மன்றத்தால் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு






(சர்ஜுன் லாபீர்)

கல்முனை பிராந்தியத்தில் பல்வேறுபட்ட சமூக சேவைகள் செய்து வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான கல்முனை பொதுப் பணி மன்றத்தால் நேற்று (23) சுமார் 250 வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு அதன் தலைவர் தொழிலதிபர் அல்ஹஜ் எஸ்.எல் அமீர் தலைமையில் அதன் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது அமைப்பின் செயலாளர் நிசார் மஜீட், உயர்பீட உறுப்பினர்களான பி.டி கபீர், எம்.அஸ்வர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# உலக காசநோய் தினத்தில் நடைபவனியுடன் விழிப்பூட்டல்

(பாறுக் ஷிஹான்)

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனியும் விழிப்பூட்டல் கருத்தரங்கும் அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் இடம்பெற்றன.

“ஆம் எம்மால் காச நோயை இல்லாதொழிக்க முடியும்” எனும் தொனிப்பொருளில் பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர்.ஏ.எல்.அப்துல் கபூர் தலைமையில் இது இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சி.எம். மாஹிர் மலேரியா தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம். எம். நௌஷாத், ஆயுள்வேத பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம். ஏ. நபீல், பாலியல் தொற்று நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஐ.எல். ஜலால்தீன் உள்ளிட்ட பிரிவு தலைவர்களும் சாய்ந்தமருது பிரதேச வைத்திய சாலையின் பிரதேச வைத்திய அதிகாரி உள்ளிட்ட வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல் முன்பாக ஆரம்பித்த நடைபவனி சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை வரை சென்றது.அந்த வைத்தியசாலையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றும் இடம்பெற்றது.

இதன்போது காசநோய் தொடர்பாகவும் அந்த நோய்க்கான அறிகுறிகள், அந்த நோயிலிருந்து பாதுகாப்பு பெறுதல், சமூகத்தில் காசநோயை கட்டுப்படுத்த முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

உலக காசநோய் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 24 ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.













# வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு கண்ணகிபுரத்தில் பற்சிகிச்சை முகாம்



(நூருல் ஹுதா உமர் )

உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டுக் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய வாய் சுகாதார பிரிவு ஏற்பாடு செய்த பற்சிகிச்சை முகாம் அக்கரைப்பற்று, கண்ணகிபுரம் கண்ணகி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

“மகிழ்ச்சியான வாய் ஆரோக்கிய மான உடல்” எனும் தொனிப்பொருளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வீ.பபாகரன், கல்முனை பிராந்திய தாய்சேய் நலன்பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின், ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி பீ.அகிலன், பிராந்திய வாய் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.சரூக், கண்ணகி மகா வித்தியாலய அதிபர் ரீ.ராசநாதன் மற்றும் பல மருத்துவர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.வாய் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெற்றது. பிராந்திய வாய் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.சரூக், டாக்டர் ஹபீல் ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் விரிவுரையாற்றினர்.

ஒவ்வொரு வருடமும் மார்ச் 20 ஆம் திகதி உலக வாய் சுகாதார தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டுக் கல்முனை பிராந்திய வாய் சுகாதார பிரிவு மருத்துவ முகாம், விழிப்புணர்வுக் கருத்தரங்கு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரியின் பூரண ஒத்துழைப்புடன் பற்சிகிச்சை முகாம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை சிட்னியில் வெள்ளியன்று திறப்பு விழா!



ஆஸ்திரேலியா சிட்னி மாநகரில் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளியன்று உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை திறப்பு விழா இடம்பெறவுள்ளது.

சிட்னியில் வாழும் காரைதீவைச் சேர்ந்த உதயசூரியன் மாணவர் உதவி மையத்தின் தலைவரும், உதயசூரியன் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியருமான நாகமணி குணரெத்தினம் கிழக்கு உதயசூரியன் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு சிலை அமைத்துள்ளார்.

சுவாமிகள் பிறந்த இலங்கை திருநாட்டுக்கு வெளியே முதல் தடவையாக கடல் கடந்த நாடுகளில் சுவாமிகளின் திருவுருவச் சிலை நிறுவும் முதல் வரலாற்று நிகழ்வு இதுவாகும்.

இந்தச் சிலை சுவாமி விபுலானந்த அடிகளாரின் 132 ஆவது ஜனன தினமான எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு பின்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிட்னி மாநகரில் துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தச் சிலை திறப்பு விழாவுக்கு உலக நாடுகளில் இருந்து குறிப்பாக இந்தியா, லண்டன், கனடா, சிங்கப்பூர், மலேசியா, பிரான்ஸ், இலங்கை போன்ற நாடுகளிலிருந்து பல பேராளர்கள் சிட்னிக்கு வருகைதரவுள்ளனர்.

வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் பிறந்த காரைதீவுமண்ணிலிருந்து சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவரும் ஆலோசகருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையிலும், மட்டக்களப்பு மண்ணிலிருந்து மட்டக்களப்பு தமிழ் சங்கத் தலைவர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் குழுவினர் இச்சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்ள ஏற்பாடாகியுள்ளது.

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலாநந்த அடிகளாருக்கு இலங்கைக்கு வெளியே முதன்முதல் ஆஸ்திரேலிய மண்ணில் முதலாவது வெண்கலச்சிலை திறந்து வைக்கப் படவுள்ளமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

உலக நாடுகளை உலுக்கிய கொடிய கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் கடந்த 2020.04.04 ஆம்திகதி நடைபெறவிருந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தஅடிகளாரது திருவுருவச்சிலை திறப்புவிழா பிற் போடப்பட்டிருந்தமை தெரிந்ததே.

# நாம் தமிழர் கட்சியின் 40 வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்துள்ளார் சீமான்!



தமிழகம் மற்றும் புதுச்சேரியில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சியின் 40 வேட்பாளர்களை, கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிமுகம் செய்து வைத்தார்.

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு நாம் தமிழர் கட்சியின் சார்பில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் போட்டியிடும் 40 வேட்பாளர்கள் அறிமுக பொதுக் கூட்டம் சென்னை கோவிலம்பாக்கத்தில் நடைபெற்றது.

கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமை தாங்கி, மக்களவைத் தேர்தலில் போட்டியிட உள்ள 40 வேட்பாளர்களையும் ஒரு சேர மேடையில் ஏற்றி அறிமுகப்படுத்தினார்.

அதன்படி தலா 20 பெண் வேட்பாளர்கள், 20 ஆண் வேட்பாளர்கள் சரி சமமாக நாம் தமிழர் கட்சியின் சார்பாக வரும் மக்களவைத் தேர்தலுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதில் 16 மருத்துவர்கள், 6 பொறியாளர்கள், 7 ஆசிரியர்களும் அடங்குவர். இது தவிர கல்வியாளர், முனைவர், தொழில்முனை வோர்களும் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர். வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்த பின்னர் பொதுக் கூட்டத்தில் சீமான் பேசுகையில், "தேர்தலுக்கான கட்சியின் சின்னமே என்னவென்று தெரியாமல் வேட்பாளர்களை அறிவிக்க வந்துவிட்டான் என்று விமர்சிக்கின்றனர். என் மக்கள் என் சின்னத்தை தேட மாட்டார்கள். என் எண்ணத்தை தான் தேடுவார்கள். சின்னம் வைத்திருக்கும் கட்சிகளை காட்டிலும், சின்னம் எதுவென்றே தெரியாத நாம் தமிழர் கட்சி துடிப்போடு களத்தில் நிற்கிறது. கூட்டணி இல்லாமல் எப்படி தேர்தலில் வெல்வீர்கள் என்று நினைக்கின்றனர். கூட்டணி வைத்தும் தோல்வியுற்றவர்களை என்ன செய்வது? 40 தொகுதியிலும் தனித்து போட்டியிடும் துணிவு நாம் தமிழர் கட்சிக்கு மட்டும் தான் உண்டு.- என்றார்.

# இலங்கை சிறையிலுள்ள மீனவருக்கு சட்ட உதவிகளை வழங்கிட வேண்டும்!



(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் 32 பேரை மீட்க வலியுறுத்தி வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் அனுப்பியுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த 32 மீனவர்கள், எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி 21-3-2024 அன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும் அவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளைச் செய்திடவும் வலியுறுத்தி, தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் அண்மைக் காலமாக தொடர்ந்து கைது செய்யப்படுவது ஆழ்ந்த வேதனையை அளிக்கிறது.

கடந்த சில வாரங்களாக பல்வேறு சம்பவங்களில் இந்திய மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது, அவர்களது குடும்பத்தினரிடையேயும், மீனவ சமூகத்தினரிடையேயும் பெருத்த மன உளைச்சலையும், நிச்சயமற்ற சூழலையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 76 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினையில் தாமதம் ஏதுமின்றி தீர்வு காண, தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியுள்ள முதல் - அமைச்சர், இலங்கை நீதிமன்றங்களில் தண்டனை பெற்று, இலங்கை சிறைகளில் வாடும் மீனவர்களுக்கு தேவையான சட்ட உதவிகளை வழங்கிடவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே, இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இலங்கைச் சிறைகளில் வாடும் மீனவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை உறுதி செய்திடவும் வேண்டும்.- என்றுள்ளது.

# இந்தியாவிடம் கடன் கோரியுள்ள மாலைதீவு!



மாலைதீவு ஜனாதிபதி மூயிஸ் இந்தியாவிடம் கடன் நிவாரணம் கோரியுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மாலைதீவில் இருந்து இந்திய இராணுவ வீரர்கள் வெளியேற வேண்டும் என்று மாலைதீவு ஜனாதிபதி வலியுறுத்தியதால், இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்ட நிலையில் தற்போது இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


இந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை மாலைதீவு ஊடகத்துக்கு ஜனாதிபதி மூயிஸ் அளித்த நேர்காணலில், மாலைதீவின் தேசிய பாதுகாப்பு கருதியே இந்திய வீரர்கள் வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தினேன்.

இந்தியா மட்டுமின்றி வேறு எந்தவொரு நாட்டின் இராணுவம் மாலைதீவில் இருந்திருந்தாலும், இதைத்தான் எனது அரசு செய்திருக்கும். இதில் வேறு எந்த தனிப்பட்ட காரணமும் இல்லை.

இதேவேளை, மாலைதீவின் நெருங்கிய நண்பராக இந்தியா தொடர்ந்தும் இருக்கும் எனவும் மாலைதீவு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

எனினும், கடந்த ஆண்டு இறுதி நிலவரப்படி 400.9 மில்லியன் டொலர்களை இந்தியாவுக்குக் கடனாக மாலைதீவு திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மொஸ்கோ தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 133 ஆக உயர்வடைந்துள்ளது!



ரஷ்யா – மொஸ்கோவில் உள்ள குரோகஸ் சிட்டி மண்டபம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 133 ஆக உயர்ந்துள்ளது என்று அந்த நாட்டு விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், அவசர கால சேவை பணியாளர்கள் கட்டடத்தின் இடிபாடுகளில் தொடர்ந்தும் தேடுதல்களை முன்னெடுத்து வருவதாக கூறப்படுகிறது.

தாக்குதல்தாரிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட பின்னர் மண்டபத்துக்கு தீயிட்ட போதே பலர் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் 150 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். தாக்குதல் நடத்தியவர்கள் அரங்குக்குள் நுழைந்து, பொது மக்கள் மீது துப்பாக்கி பிரயோகம் நடத்தியதுடன் அரங்கத்துக்கு தீயிட்டுள்ளனர்.

எனினும் அவர்கள் பிரையன்ஸ்க் பிராந்தியத்தில் நாட்டின் எல்லைக்கு அருகில் ரஷ்ய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முதற்கட்ட விசாரணைகளின் படி, தாக்குதல் நடத்தியவர்கள் உக்ரைனுக்குள் செல்ல முயன்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் தாக்குதல்தாரி ஒருவர் தாக்குதலைச் செய்ய தனக்கு எப்படி பணம் கொடுக்கப்பட்டது என்பதை விவரிக்கும் காட்சி அடங்கிய காணொளி ஒன்று வெளியாகியுள்ளது.

இந்தத் தாக்குதல்களை நடத்துவதற்காக தமக்கு 500,000 ரூபிள் தருவதாக உறுதியளிக்கப்பட்டது.

இதில் பாதித் தொகை தமது வங்கி செலவு அட்டைக்கு மாற்றப்பட்டது என அவர் கூறியுள்ளார்.

## நைஜீரியா வடமேற்கு குரிகாவில் கடத்தப்பட்ட மாணவர் விடுவிப்பு



நைஜீரியாவின் வடமேற்கு நகரமான குரிகாவில் கடந்த 07 ஆம் திகதி கடத்தப்பட்ட 280 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று கதுனா மாநில ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கரிஜா நகரில் இருந்து கடத்தப்பட்ட 287 மாணவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்றும் மாணவர்களுக்கு எந்த பாதிப்பும் இன்றி விடுதலை செய்வதற்காக நடவடிக்கை மேற்கொண்ட நைஜீரிய அதிபருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் ஆளுநர் உபா சானி தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டில் இதுபோன்ற கடத்தல் சம்பவங்கள் அரசுக்கு பெரும் தலைவலியாக இருந்தது. இதன் பின்னர் தற்போது சமீப காலமாக நாட்டின் வடமேற்கு பகுதி மற்றும் மத்திய பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திவரும் ஆயுதக்குழுவினர் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் - 5

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 24/03/2024

## வான்கூவர் தீவுகளில் ஒரே நாளில் 2,000 சிறிய நிலநடுக்கங்கள் பதிவு

கனேடிய தீவொன்றில், இந்த மாத ஆரம்பத்தில், ஒரே நாளில் 2,000 முறைக்கும் அதிகமாக நிலநடுக்கங்கள் உருவானதாக செய்தி ஒன்று வெளியாகியுள்ள நிலையில், அது பயத்தை C2 ▶



# முன்னாள் பிரதமர் முல்ரோனிக்கு முழு மரியாதையுடன் பிரியாவிடை

கனடாவின் 18 ஆவது பிரதம மந்திரியாகப் பணியாற்றிய பிரையன் முல்ரோனியின் இறுதிச் சடங்குகள் மற்றும் இறுதி ஊர்வலம் என்பன முழு அரச மரியாதைகளுடன் மாண்ட்ரீலில் உள்ள நோட்ரே-டேம் பசிலிக்காவில் நேற்று சனிக்கிழமை காலை 11 மணிக்குத் தொடங்கி இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக இடம்பெற்றன. C2 ▶





# நமது வரலாற்றை வடிவமைத்தவருக்கு இப்போது இறுதிவிடை கொடுத்தோம்!

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உருக்கம்

கனடாவின் முன்னாள் பிரதமர் பிரையன் முல்ரோனியின் இறுதிச் சடங்கிற்கு பின் ஜஸ்டின் ட்ரூடோ உருக்கமாக பதிவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 29ஆம் திகதி முன்னாள் பிரதமர் பிரையன் முல்ரோனி, தனது 84 வயதில் காலமானார்.

அவரது இறுதிச்சடங்கு சனிக்கிழமையன்று (நேற்று) நடந்தது. இதில் பிரையனை கௌரவிக்க அரசியல்வாதிகள், உயரதிகாரிகள் மற்றும் பிரபலங்கள் பொது மக்களுடன் கலந்து கொண்டனர்.

அப்போது பிரதமர் ட்ரூடோ, "பிரையன் நமது வரலாற்றை வடிவமைத்தார். அவர் பெரிய விடயங்களை சரியாகப் புரிந்துகொண்டார். அவர் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தினார்" என செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தென் ஆப்பிரிக்காவின் நிற வெறிக்கு எதிராக பேசிய கனடாவின் மிகச் சிறந்த பிரதமர்களில் ஒருவராக இருந்த பிரையன் முல்ரோனி, 1980களில் C2 ▶



# 1987 - 1989 ஜே.வி.பி. கிளர்ச்சிக்கு வருத்தம் தெரிவித்தார் அனுரகுமார!






தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இலங்கையில் 1987-1989 கிளர்ச்சிக்கு வருத்தம் தெரிவித்தார்.

நேற்றையதினம் கனடா - ரொறன்ரோவில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில், கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வன்முறைக்கு வழிவகுத்த சூழ்நிலைகள் அப்போது இருந்தன எனவும் அனுரகுமார திஸாநாயக்க கூறினார்.

இவ்வாறாயினும், ஜே.வி.பி நடந்ததை பின்வாங்கி தற்போது அரசியல் கட்சியாக முன்னேறியுள்ளது.

1987-1989 ஜே.வி.பி.கிளர்ச்சி, அல்லது ஜே.வி.பி. பிரச்சினைகள் இன்றுவரை அனைவராலும் அறியப்படுகிறது, இது இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி இலங்கையில் ஆயுதமேந்திய கிளர்ச்சியாகும்.

1971 இல் முந்தைய கிளர்ச்சியைப் போலவே, அந்த கிளர்ச்சியும் தோல்வியடைந்தது.

ஜே.வி.பி. தலைமையிலான கிளர்ச்சியாளர்கள் அப்போது, இராணுவ மற்றும் சிவிலியன் இலக்குகள் மீதான தாக்குதல், படுகொலைகளை மேற்கொண்டனர்.

அதே நேரத்தில் இலங்கை அரசாங்கம் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு எதிர்க் கிளர்ச்சி நடவடிக்கைகளை செய்ததன் மூலம் ஜே.வி.பி. கிளர்ச்சி எதிர்வினையாற்றியது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

**நமது வரலாற்றை...** (C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவுடனான வர்த்தக உறவுகளை உறுதிப்படுத்தினார்.

இந்த நிலையில் ட் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது எக்ஸ் பக்கத்தில், “இன்று நாம் பிரையன் முல்ரோனியிடம் விடைகொடுத்தோம். ஆனால், தலைமுறை தலைமுறையாக அவர் காட்டிய முன்மாதிரியையும், பாரிய சாதனைகளுக்கு வழிவகுத்த அவரது துணிச்சலையும், இந்த நாட்டின் மீது அளவற்ற நம்பிக்கையையும் நாம் நினைவில் கொள்வோம். ஒரு நினைவுச் சின்னத்தை இழந்துவிட்டோம். உங்கள் ஆன்மாக அமைதிபெறட்டும் நண்பரே“ என பதிவிட்டுள்ளார்.



---

**முன்னாள் பிரதமர்...**
(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முல்ரோனியின் மரணத்தின் போது அவரது வயதைக் குறிக்கும் வகையில், 84 முறை கதீட்ரலின் கரில்லான் மணிகளை அடிப்பதன் மூலம் சனிக்கிழமையின் நினைவேந்தல் தொடங்கியது.

இறுதி ஊர்வலம் - ராயல் கனடியன் மவுண்டட் பொலிஸாரின் அணிவகுப்பு, மரியாதைக்குரிய காவலர் அணி நடை, இராணுவ இசைக்குழுக்கள் மற்றும் கௌரவ பல்லாங்குழிகள் தாங்கிய பரிவார அணியினர் என சகல மரியாதைகளுடனும் - பின்னர் சென் பற்றிக்ஸ் பசிலிக்காவில் இலிருந்து கதீட்ரல் வரை பனிக்கட்டிப் பாதையில் கிலோமீட்டர் தூரம் நடைபெற்றது.

1939 ஆம் ஆண்டு பை-கோமெள, க்யூவில் ஒரு தொழிலாள வர்க்க குடும்பத்தில் பிறந்த அவர், 1983இல் முற்போக்கு கன்சர்வேடிவ் கட்சியின் தலைமையை கைப்பற்றுவதற்கு முன்பு பல ஆண்டுகள் பழமைவாத அரசியலில் திரைக்குப் பின்னால் பணியாற்றினார். 1984 இல் இருந்து 1994 வரை 9 ஆண்டுகள் வரை பிரதமராக இருந்த பிரையன் முல்ரோனி கனடிய வரலாற்றில் அதிக எண்ணிக்கையிலான இடங்களைக் கொண்ட பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்த பிரதமர் என்ற சாதனையைப் படைத்தவர்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உட்பட பல பிரமுகர்கள் இறுதி நிகழ்வில் பங்குபற்றினர்.

கனடாவின் 18 ஆவது பிரதம மந்திரியாக முல்ரோனி பதவி வகித்தமையை பிரதிபலிக்கும் வகையில் 18 முறை கரில்லான் மணிகளை அடிப்பதோடு, பழைய மாண்ட்ரீல் துறைமுகத்தில் உள்ள கடிகார கோபுரத் தூணில் இருந்து 19-துப்பாக்கி வணக்கத்துடன் இறுதிச் சடங்கு முடிந்தது.

இறுதிச் சடங்கைத் தொடர்ந்து முன்னாள் பிரதமருக்கு தனிப்பட்ட முறையில் அடக்க நிகழ்வை முன்னெடுக்க குடும்பத்தினர் திட்டமிட்டுள்ளனர் என்று மத்திய அரசு அதிகாரி ஒருவர் கூறினார்.

---

**வான்கூவர் தீவுகளில்...**
(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தும் விடயம் அல்ல என அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கனடாவின் வான்கூவர் தீவுகளில், இம்மாத ஆரம்பத்தில் ஒரே நாளில் 2,000க்கும் அதிகமான நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன.

ஆனால், அது அச்சுறுத்தும் செய்தி அல்ல, அது ஒரு இயற்கை நிகழ்வு என்கிறார்கள் அறிவியலாளர்கள். அந்த நிலநடுக்கங்கள் அனைத்துமே ரிக்டரில், 1க்கும் குறைவான அளவிலேயே பதிவானவையாகும்.

கடலுக்குக் கீழே உள்ள நிலப்பரப்பில், அதாவது கடல்படுகையில், இரண்டு புவித் தட்டுகள் மெதுவாக விலகும்போது, இரண்டு தட்டுகளுக்கும் இடையில் சுமார் 1 மீற்றர் நீளமான இடைவெளி உருவா-கும். அந்த இடைவெளியை நிரப்புவதற்காக, பூமியின் மையப்பகுதியிலிருக்கும் எரிமலைக் குழம்பு மெதுவாக மேலே வந்து, உறைந்து அந்த இடத்தில் பாறையாக மாறி அமர்ந்துவிடுமாம். ஆக, புவித்தட்டுகள் விலகிய இடத்தில், ஒரு புதிய கடல் படுகை உருவாகிறது.

ஸ்ரீநயகடழுழச ளிசநயனனைப என்று அழைக்கப்படும் இந்த நிகழ்வின் காரணமாகவே இந்த சிறு சிறு நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

# Super Deal of this Week

## till March 25th




LOWEST PRICE
~~10.99$~~
8.99
Only at GUNAAM'S SUPER MARKET

LOWEST PRICE
~~19.99$~~
15.99
Only at GUNAAM'S SUPER MARKET






LOWEST PRICE
LB
7.99$
Only at GUNAAM'S SUPER MARKET

ஊர் ஆட்டிறைச்சி



LOWEST PRICE
LB
6.99$
Only at GUNAAM'S SUPER MARKET

Ceylon விளைமீன்

## Gunaam's super market இந்த வாரம் அள்ளித்தரும் Super Deal

### அனைத்து Fresh மீன்கள் மிக மிக குறைந்த விலையில்...

| | | | |
|---|---|---|---|
| Ceylon விளைமீன் | - $6.99 lb | இறால் | - $3.99 lb |
| Ceylon ஓரா | - $6.99 lb | ஊர் ஆட்டிறைச்சி | - $7.99 lb |
| Ceylon சீலா Fish | - $7.99 lb | காரல் Fish | - $7.99 lb |
| Ceylon கும்பிளா Fish | - $6.99 lb | திரளி மீன் | - $7.99 lb |
| Ceylon பாரை Fish | - $7.99 lb | காட்டுப் பன்றி | - $4.99 lb |
| Ceylon கொடுவா Fish | - $8.99 lb | முழு King Fish | - $6.99 lb |
| சுறா Fish | - $6.99 lb | | |

| | | | |
|---|---|---|---|
| 10 Kg Double Horse Rice | - $23.99 | MR Goudas Coconut Powder 3 For | - $10.00 |
| Maharaja Rice Flour | - $8.99 | Nestum Serial | - $5.99 |
| Maharaja Basmati Rice | - $13.99 | Waadiya Coconut Milk Powder | - $2.99 |
| MR Goudas Sun Flower oil 3L | - $8.99 | Raigum Noodles 2 for | - $5.00 |
| MR Goudas Sea Salt | - $1.49 | | |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998

# கனடாவில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கார்களை மீள அழைக்கின்றது நிறுவனம்

கனடாவில் ஏர்பேக்குகள் குறைபாடு காரணமாக பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட டாட்ஜ் மற்றும் கிரைஸ்லர் செடான் கார்களை ஸ்டெல்லாண்டிஸ் நிறுவனம் திரும்பப் பெற்றுள்ளது.

2018 மற்றும் 2021 க்கு இடையில் மதிப்பிடப்பட்ட 10,285 டாட்ஜ் சார்ஜர் மற்றும் கிறைஸ்லர் 300 செடான்கள் அவற்றின் பக்கவாட்டு ஏர்பேக் இன்ஃப்ளேட்டரை மாற்றியமைக்க திரும்ப அழைக்கப்பட்டுள்ளன என நிறுவனம் கூறுகிறது.

இது அதிக சக்தியுடன் வெடித்து, ஓட்டுநர்கள் மற்றும் பயணிகள் மீது உலோகத் துண்டுகளை வீசக்கூடும்.

வாகன உற்பத்தியாளர் கூறுகையில், உற்பத்திக் குறைபாட்டின் காரணமாக ஈரப்பதம் இன்ஃப்ளேட்டர்களுக்குள்



நுழைந்து அரிப்பு மற்றும் விரிசல்களை ஏற்படுத்தக்கூடும், அதே நேரத்தில் கேபினில் அதிக வெப்பநிலை காரணமாக காற்றுப்பைகள் செயலிழக்காமல் கூட பெருகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், ஏர்பேக் தொடர்பான வெடிப்புகளால் காயங்கள் அல்லது விபத்துகள் ஏற்பட்டமை குறித்து தனக்குத் தெரியாது என்று நிறுவனம் கூறுகிறது.

டிரான்ஸ்போர்ட் கனடாவின் இணைய தளத்தின்படி, நிறுவனம் உரிமையாளர்களுக்கு அஞ்சல் மூலம் விடயத்தைத் தெரிவிக்கும் மற்றும் அவர்களின் காரை டீலர்ஷிப்பிற்கு எடுத்துச் செல்லும்படி அறிவுறுத்தலாம்.

ஸ்டெல்லாண்டிஸ் கூறுகையில், திரும்ப அழைக்கப்பட்ட வாகனங்களில் ஒரு சதவீதத்திற்கும் குறைவான எண்ணிக்கையில் குறைபாடு மதிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அதன் நுகர்வோர் திரும்ப அழைக்கும் அறிவிப்புகளுக்கு பதிலளிக்குமாறு வலியுறுத்தியுள்ளது. உலகளவில், 318,000 டாட்ஜ் மற்றும் கிரைஸ்லர் வாகனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.



# மாணவர்களின் ஓவியங்களை பணமாக்க முயற்சித்த ஆசிரியர்

## பெரும் நஷ்டஈட்டு வழக்கை எதிர்கொள்கிறார்

மொண்ட்ரீல் பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் கலைப் படைப்புகள் தங்கள் கலை ஆசிரியரால் ஒன்லைனில் விற்பனைக்காக பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவித்து அதற்கு எதிராக அந்த மாணவர்களின் பெற்றோர்கள் அதிகாரப்பூர்வமாக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

பத்து பெற்றோர்கள் பதிப்புரிமைச் சட்டத்தின் கீழ் 1.575 மில்லியன் டொலர் அல்லது ஒரு வாதிக்கு 155,000 டொலர் என ஆசிரியர் மரியோ பெரோன் மற்றும் லெஸ்டர் பி. பியர்சன் பள்ளி வாரியம் (டிஃபீஏஸ்) ஆகிய தரப்புகளுக்கு எதிராகஅறிவுசார் சொத்துரிமை மீறல் புகார் அளித்தனர்.

மேலும், இச்செயலுக்காக அவர்கள்



மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும், மாணவர்களின் படைப்புகளை இணையதளத்தில் இருந்து நீக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிப்ரவரியில்,

க்யூவில் உள்ள செயிண்ட்-லாசரில் உள்ள வெஸ்ட்வுட் ஜூனியர் உயர்நிலைப் பள்ளியில் 12 வயதுடைய மாணவர்கள் படிக்கின்றனர். 55 டொலருக்கு விற்கப்படும் டி-ஷர்ட்கள், 41 டொலருக்கு விற்கப்படும் காபி குவளைகள் மற்றும் ஒவ்வொன்றும் 35 டொலருக்கு விற்கப்படும் ஐபோன் கேஸ்கள் உட்பட ஒன்லைனில் விற்பனைக்கு பட்டியலிடப்பட்டுள்ள பல பொருள்களில் தங்களுடைய சொந்த வரைபடங்களை இந்த மாணவர்கள் கண்டுபிடித்தனர்.

இந்தக் கதை சர்வதேச தலைப்புச் செய்திகளை உருவாக்கியது. கோபமடைந்த பெற்றோர்கள் வழக்குத் தொடர முடிவு செய்தனர்.

இந்த ஆவணங்கள் இப்போது கியூபெக் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று பெற்றோர் ஜோயல் டிபெல்லெஃப்யூயில் தெரிவித்தார். அவரது சகோதரர், வழக்கறிஞர் Martin DeBellefeuille பெற்றோரைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்.

# வாகனக் கொள்ளை, திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 31 பேர் ரொறன்ரோவில் சிக்கினர்

அண்மைய நாள்களில் வாகனத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில்கனடாவின் ரொறன்ரோவில் வாகனத் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 31 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஒன்றாரியோ மற்றும் மொன்றியாலில் பொலிஸார் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

வாகனக் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஒன்றாரியோ மற்றும் மொன்றியல் பொலிஸார் கூட்டாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கூட்டு ஊடக சந்திப்பு ஒன்றும் நடத்தப்பட்டது. நாட்டின் பல பகுதிகளில் இந்தக் கும்பல் வாகனத் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஒன்றாரியோவில் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் திருடப்பட்டுள்ளன.

அண்மைக் காலமாக ஆயுத முனையில் வாகனக் கொள்ளைச் சம்பவங்கள் கூடுதலாக பதிவாகி வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

